**செ.வெ.எண்: 06** **நாள்: 01.09.2016**

# பத்திரிகைச்செய்தி

புதுக்கோட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் காலியாக உள்ள காவலர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

புதுக்கோட்டை மச்சுவாடியில் இயங்கி வரும் அரசு மறுவாழ்வு இல்லத்தில் காலியாக உள்ள காவலர் பணியிடங்கள் 4 நிரப்பப்பட உள்ளது. இப்பணியிடங்களுக்கு கீழ் குறிப்பிட்டுள்ள பணியிடங்களுக்கு 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற ஆண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் 12.09.2016 மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இதற்கென தனியான விண்ணப்ப படிவம் இல்லை. வெள்ளைத்தாளில் விண்ணப்பித்து கல்விச்சான்று, சாதிச்சான்று, குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு அடையாள அட்டை ஆகியவற்றின் நகலுடன் நிர்வாக அலுவலர், அரசு மறுவாழ்வு இல்லம், மச்சுவாடி புதுக்கோட்டை என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ், இ.ஆ.ப. அவர்கள் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்கள். பணியிட விபரம் வருமாறு.

1) பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) 1 பணியிடம் (ஆண்) முன்னுரிமை அற்றவர், கல்வித்தகுதி 10ம் வகுப்பு தேர்ச்சி, வயது வரம்பு 18 முதல் 32 வயது வரை
2) பொதுப்போட்டி, முன்னுரிமை அற்றவர் 2 பணியிடம் (ஆண்கள்), கல்வித்தகுதி 10ம் வகுப்பு தேர்ச்சி, பிற்பட்ட வகுப்பு 18 வயது முதல் 30 வயது வரை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு-சீர்மரபினர் 18 வயது முதல் 32 வயது வரை தாழ்த்தப்பட்ட வகுப்பு, பழங்குடியினர்-அருந்ததியினர் 18 வயது முதல் 35 வயது வரை
3) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர், முன்னுரிமை பெற்றவர் ஆண் பணியிடத்திற்கு பின்வரும் முன்னுரிமை கோரும் நபர்களிடமிருந்து கலப்புத்திருமணம், தாயகம் திரும்பிய இலங்கை தமிழர்கள், சுதந்திர போராட்ட தியாகிகளின் வாரிசு, அரசுக்கு நிலம் கொடுத்தோர், அரசுப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டோர் ஆகியோரிடமிருந்து இப்பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. கல்வித்தகுதி 10ம் வகுப்பு தேர்ச்சி, வயது வரம்பு 18 வயது முதல் 32 வயது வரை மற்றும் விதிகளின்படி வயது வரம்பில் சலுகைகள் உண்டு.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**